# <u>DEPOSITION OF WITNESS</u>

# <u>IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.</u>

## PROSECUTION OF WITNESS

## CC.No.227/2020

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **30.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**A1, A3, A4, A5, A7, A9, A10 present. A6, A8 absent.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW-9 : திருமதி.ராஜலட்சுமி (வட்டாட்சியர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஊத்தங்கரையில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2008 ஆண்டு பணியில் சேர்ந்து தடங்கம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 2010 ஆண்டு மனோகர் த/பெ பாக்கியநாதன் என்பவர் கூட்டுறவு வங்கியில் வீட்டு அடமான கடன் பெற்றதில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், அதன்பேரில் வணிக குற்றபிரிவு புலனாய்வு போலிசார் சர்வே எண்.592/45 இல் யார் பெயரில் உள்ளது என்றும், அந்த சர்வே எண்ணில் வீடு உள்ளதாக என கடிதம் மூலம் கேட்டதின்பேரில் தருமபுரி வட்டம், 29 தடங்கம் கிராமம், நத்தத்தில் பட்டா எண்.854வும், UDR அ.பதிவேட்டில் பட்டா எண்.1141 என்றும் இருந்தது. சர்வே எண்.592/45 பழைய உட்பிரிவு எண்.2A9B2F டேவிட் மனைவி மேரி டைசி என்பவர் பெயரில் பதிவாகி இருந்தது என்றும், அதில் இரண்டு அடுக்கு தார்சு வீடு கட்டப்பட்டு உள்ளது என்றும் நான் சான்று அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சான்றிதழில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **சான்றிதழ் அ.சா.ஆ.52** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>3 முதல் 10வது எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வேண்டுகோள் கடிதத்தின்பேரில் தான் சான்று அளித்தேன். வணிக புலனாய்வு காவல் துறையினர் என்னிடம் கடிதம் கொடுத்தனர். இந்த வழக்கு சம்மந்தமாக கடிதம் கொடுத்ததின்பேரில் தான் சம்பவ இடம் சென்று ஆய்வு செய்து சான்று கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சென்று பார்த்தபோது அந்த இடத்தில் வீடு இருந்தது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலகத்தில் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர், தேதி எனக்கு ஞாபகம் இல்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.30 16:02:49 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.**

**PROSECUTION OF WITNESS**

**CC.No.227/2020**

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **30.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**A1, A3, A4, A5, A7, A9, A10 present. A6, A8 absent.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW–10 : திரு.மாரியப்பன் (சார் பதிவாளர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம், நல்லூரில் சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010 ஆண்டு கடகத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது வணிக புலனாய்வு போலிசார் சர்வே எண்.97/8, பட்டா எண்.1145, 76 ச.மீ பரப்பில் ராமசந்திரன் மகன் சிவம் பெயரில் தார்சு வீடு கட்டப்பட்டுள்ளதா என கேட்டதற்கு இணங்க நான் நேரில் சென்று பார்வையிட்டு மேற்படி சர்வே எண்.97/8இல் ராமசந்திரன் மகன் சிவம் பெயரில் ஓட்டு வீடு ஒன்று உள்ளது என்று சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சான்றிதழில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **சான்றிதழ் அ.சா.ஆ.53** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**3 முதல் 10வது எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.30 16:02:57 +0530